செய்தி வெளியீடு எண்:693 நாள்:06.09.2021

# பத்திரிக்கை செய்தி

கடந்த நாற்பது ஆண்டுகளாக "ஆவின்" எனும் வணிகப் பெயர் தமிழகத்தின் அனைத்து குடும்பங்களிலும் பிரபலமாக உச்சரிக்கப்படும் பெயராக உள்ளது. ஆவின் நிறுவனம் கிராம அளவில் தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம், மாவட்ட அளவில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் மற்றும் மாநில அளவில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் என்ற மூன்றடுக்கு கட்டமைப்பில் செயல்பட்டு வருகிறது. ஆவின் நிறுவனம் 4.36 லட்சம் பால் உற்பத்தியாளர்கள் மூலம் நாளொன்றுக்கு 41 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்து, 26.68 லட்சம் லிட்டர் பாலை நாள்தோறும் நுகர்வோருக்கு தமிழ்நாடு முழுவதும் விற்பனை செய்து வருகிறது. இந்திய அளவில் கூட்டுறவு அமைப்பின் கீழ் தமிழ்நாடு மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளது.

தமிழக அரசின் ஆணைக்கிணங்க கடந்த 16.05.2021 அன்று முதல் ஆவின் பால் விலை லிட்டர் ஒன்றுக்கு ரூ.3/- வீதம் குறைந்து விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இந்த விலை குறைப்பு அனைத்து தரப்பு மக்களிடையே மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது. மேலும் இந்த விலை குறைப்பினால் சுமார் 1.75 லட்சம் லிட்டர் பால் விற்பனை உயர்ந்துள்ளது மற்றும் பால் உபபொருட்கள் விற்பனை கணிசமாக உயர்ந்துள்ளது.

ஆவின் விற்பனை அதிகரிக்கும் நோக்கிலும் மற்றும் ஆவின் பால் மற்றும் பால் பொருட்கள் அனைத்து பொதுமக்களுக்கும் எளிய வகையில் சென்றடைய பல்வேறு அரசு அலுவலகங்கள் , அரசு மருத்துவமனைகள் , அரசு பூங்காக்கள் மற்றும் பேருந்து நிலையங்களிலும் ஆவின் பாலகம் அமைத்து விற்பனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும் தமிழகம் முழுவதும் 10,000 க்கும் மேற்பட்ட சில்லறை விற்பனையாளர்கள் மூலமாக விற்பனை நடைபெற்று வருகிறது. சென்னையில் 23 அதிநவீன பாலகங்கள், 18 பாலகங்கள் , 3000 சில்லறை விற்பனையாளர்கள் மற்றும் 75 மொத்த விற்பனையாளர்கள் மூலமாக மாதம் ஒன்றுக்கு சராசரியாக 13.50 லட்சம் லிட்டர் பால் மற்றும் 25 கோடி மதிப்பிலான பால் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக தற்போது சில்லறை விற்பனையாளர்களை அதிக படுத்தும் நோக்கில் நடைமுறையில் உள்ள வைப்பு

தொகையை குறைத்தும் மற்றும் வழிமுறைகளை எளிமையாக்கியும், விண்ணப்பிக்கும் அனைவருக்கும் தகுதியின் அடிப்படையில் உடனடியாக உரிமம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆவின் பால் பொருட்களான நெய் , வெண்ணை, பால்கோவா , மைசூர்பா மற்றும் ஐஸ் க்ரீம் தவிர தற்போது பன்னீர், குலோப் ஜாமுன், பால்பேடா, ரசகுல்லா, குக்கீஸ் போன்ற 82 வகையான பால் பொருட்களின் விற்பனையை, அதிகரிக்க தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும்இதனை தொடர்ந்து தற்போது பொதுமக்கள் அதிக அளவில் கூடும் இடங்களில் ஆவின் பாலகம் அமைக்க முயற்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக தற்போது புதிய ஆவின் பாலகத்தை சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் அமைத்து, அதனை 06.09.2021 அன்று மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவை தலைவர் திரு.மு.அப்பாவு அவர்கள் தலைமையில், சட்டப்பேரவை துணை சபாநாயகர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு,பி.கே.சேகர்பாபு அவர்கள், மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு.சா.மு.நாசர் அவர்கள், மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள் மற்றும் சேப்பாக்கம் திருவல்லிகேனி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மற்றும்சட்டமன்ற உறுப்பினர்கள் முன்னிலையில் புதிய ஆவின் பாலகத்தை திறந்து வைத்து சிறப்பித்தனர். இந்நிகழ்ச்சியில் கால்நடை பராமரிப்பு , பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அரசு கூடுதல் தலைமை செயலாளர் திரு.தென்காசி.சு.ஜவஹர் இ.ஆ.ப., சட்டப்பேரவைச் செயலாளர் திரு. கி. சீனிவாசன் இ.ஆ.ப., ஆவின் மேலாண்மை இயக்குனர் திரு. க.சு. கந்தசாமி இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.

**மேலாண்மை இயக்குநர்**
**த.நா.பா.உ.கூ,இணையம்**

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 9